தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே 80 மையங்களில் தமிழ்நாடு முழுவதும் விபத்துத் தடுப்பு மையங்களை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே இப்போது 70 மையங்கள் நடைபெற்று வருகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில், விபத்துகள் நடந்துவிட்டாலும்கூட, அதிலிருந்து மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்கின்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்; ஓட்டுநர் உரிமம் வழங்குவது குறித்து விழிப்புணர்வு வேண்டும், சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகளை ஏற்று, ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதில் அரசு கடுமையான போக்கை இப்போது கடைப்பிடித்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல, அந்த ஓட்டுநர்களுக்கு யோகா பயிற்சி எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே ஓட்டுநர்களுக்கு, குறிப்பாக அரசுப் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஓட்டுநர்களுக்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது என்கின்ற தகவலையும் அன்போடு அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தளவிலே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, அம்மா அவர்களுடைய அரிய ஆலோசனைகளின்படி, அவருடைய வழிகாட்டுதலின்படி, விபத்துகளைத் தடுப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக, வேகமாக எடுத்துவருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

77—

பென்சிலின் தொழிற்சாலை

***8498—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2004 ஜூலை 29]

அம்பாசமுத்திரம் தொகுதியில் ரூ.200/– கோடி செலவில் மத்திய அரசு அறிவித்த பென்சிலின் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசின் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் பென்சிலின் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

திரு. எம். சக்திவேல் முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்சிலின் என்பது உயிர் காக்கும் மருந்து. இந்த பென்சிலின் என்பது* Penicillium Notatum *என்று அழைக்கப்படும் ஒரு பூஞ்சைக் காளானிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் உயிர் காக்கும் மருந்துகள் இல்லையென்று அறிந்த விஞ்ஞானிகள் அதாவது* Flarry Chain, *அதற்குப்பின்* Alexander Fleming *ஆகிய விஞ்ஞானிகள் இந்த அற்புதமான பென்சிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தார்கள். இந்த பென்சிலின் மருந்து* Rheumatic Fever *என்று அழைக்கப்படும் காய்ச்சலுக்கும்,* Sexually Transmitted Diseases *என்று அழைக்கப்படும் பால்வினை நோய்களுக்கும்* Leptospirosis *என்று அழைக்கப்படும் எலிக் காய்ச்சல் நோய்க்கும் மிகவும் அற்புதமான ஓர் உயிர்காக்கும் மருந்து. இந்த மருந்து இந்தியாவிலே கல்கத்தாவிலும் பம்பாயிலும்* Vikram Sarabhai *என்ற* Drug Company-*யால் மட்டும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த பென்சிலின் தயாரிப்பதற்குரிய மூலப்பொருள்–* raw material *ஆன பூஞ்சைக் காளானை உருவாக்குவதற்கும் விளைவிப்பதற்கும் ஏற்ற ஒரு தட்பவெப்பம் என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதியான பொதிகை மலையில்தான் இருக்கிறது. முன்னர் மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த எங்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு மறைந்த திரு. அருணாச்சலம் அவர்கள் 1984–லேயே அம்பாசமுத்திரம் தொகுதியிலே பென்சிலின் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று அறிவித்து அதற்குரிய பூர்வாங்க வேலைகள் அந்த நேரத்தில் நடந்தன. அனைத்துப் பத்திரிகைகளிலும் அம்பாசமுத்திரம் பகுதியில் இந்தத் தொழிற்சாலை இதோ வருகிறது, அதோ வருகிறது என்று எழுதினார்கள். எங்கள் தொகுதி மக்களும் அதை எதிர்பார்த்து இருந்தனர். அந்த நேரத்திலே மத்திய அரசாங்கத்தின் மூலம் ஏமாற்றம்தான் மிஞ்சியது.*

எனவே இந்த நேரத்தில் நான் அம்மா அவர்களுடைய அரசில் பங்கேற்றுள்ள எங்களுடைய மாவட்டத்தினுடைய தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் மீண்டும் இந்த அரிய, அற்புதமான தொழிற்சாலைக்கான—சுமார் 200 கோடி இல்லை என்றாலும், 50 கோடி அளவிலாவது மாநில அளவிலே நிறுவப்படும் என்று சொன்னால் நேரடியாக ஆயிரம் பேருக்கும், மறைமுகமாக பத்தாயிரம் பேருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடும். அனைத்து வசதிகளும், நீர் ஆதாரமும், நில ஆதாரமும் கொண்ட என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய மண்ணின் மைந்தர் அவர்கள், அம்மா அவர்களிடம் எப்படியாவது—அனுமதி பெற்று எங்களுக்கு இந்த அற்புதமான தொழிற்சாலையை அறிவிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். மாண்புமிகு எங்கள் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, இந்தத் தொழிற்சாலையை அம்பாசமுத்திரம் தொகுதியிலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TIDCO முதன்முதலில் பென்சிலின் தொழிற்சாலையை அமைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கோரியபோது அம்பாசமுத்திரத்தில் தொழிற்சாலையை நிறுவ விண்ணப்பித்து இருந்தார்கள். பிறகு புது டில்லியைச் சார்ந்த J. K. நிறுவனத்தினர் தொழில் முனைவோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுடன் இணைந்து பென்சிலின் தொழிற்சாலையை நிறுவ பல்வேறு இடங்களை ஆய்வு செய்ததில் கடலூரிலுள்ள SIPCOT வளாகம் பொருத்தமானது என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூபாய் 195 கோடி முதலீட்டில் பென்சிலின் தொழிற்சாலை நிறுவப்பட்டு 1995 ஆம் ஆண்டிலிருந்து உற்பத்தி துவங்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியில் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க புதிய தொழில் முனைவோர் யாரேனும் முன்வந்தால் அவர்களுக்குப் புதியதாக, அம்பாசமுத்திரம் பகுதியில் பென்சிலின் தொழிற்சாலையை நிறுவுவதற்கு அரசு அனைத்து உதவிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 78, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.